இந்திய அரசியலமைப்பு

பகுதி - 7

நுகர்வோர் உரிமைகள்

1. ஒரு பொருளை முழுமையாக பயன்படுத்துபவர் --- நுகர்வோர்.
2. ஒரு பொருளை விலை கொடுத்து வாங்கும் போதோ பயன்படுத்தும் போதோ ஒரு நுகர்வோர் உருவாகிறார்.
3. தகவல் அறியும் உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நாள்? அக்டோபர் - 12, 2005.
4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினால் பொதுத்துறை நிறுவனங்களின் அனைத்து நடவடிக்கைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் உரிமையாகும்.
5. நுகர்வோரை பாதுகாக்க, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப் பட்ட ஆண்டு? 1986.
6. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் முக்கிய அம்சம் யாது? மூன்று அடுக்குகளாக தேசிய அளவில், மாநில அளவில், மாவட்ட அளவில் விசாரணை மேற்கொள்ள நுகர்வோர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.
7. தேசிய அளவிலான நுகர்வோர் நீதிமன்றம் --- தேசிய நுகர்வோர் கழகம், தில்லி.
8. மாநில அளவிலான நுகர்வோர் நீதிமன்றம் --- மாநில நுகர்வோர் கமிஷன்.
9. மாவட்ட அளவிலான நுகர்வோர் நீதிமன்றம் --- மாவட்ட அமைப்பு.

10. இந்தியாவில் உற்பத்தி தரத்தை நிர்ணயம் செய்ய தொழில் சார்ந்த மற்றும் நுகர்வோர் பொருட்களில் --- இந்திய தரக் குழும குறியீடு (BIS) தரம் முத்திரை.

11. உலகில் உற்பத்தி பொருட்களின் தரத்தை உறுதி செய்ய உலக தர அமைப்பு (ISO) --- 1947 ஆம் ஆண்டு ஜெனிவாவில் துவக்கப்பட்டது.

12. ISO ஒரு அரசு சாரா நிருவனமாகும்.

13. உணவுப் பொருட்களின் உலகத் தரத்தினை அறிந்து கொள்ள 'கோடேக்ஸ் அலுமண்டேசன் கமிஷன்' நிறுவப்பட்டது.

14. 'கோடேக்ஸ் அலுமண்டேசன் கமிஷன்', 1963 ஆம் ஆண்டு இத்தாலியில் ரோம் நகரில் உணவு மற்றும் வேளாண்மை துறை நிறுவனம் (FAO) மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO) வை நிறுவியது.

15. 'தேசிய நுகர்வோர் தினம்' --- டிசம்பர் - 24.

16. 'இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்' இயற்றப்பட்ட நாள்? டிசம்பர் - 24, 1986.

17. 'உலக நுகர்வோர் தினம்' --- மார்ச் - 15.

18. 1962 ஆம் ஆண்டு நுகர்வோரின் உரிமைகள் அடங்கிய நகல் அமேரிக்க காங்கிரஸ் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

19. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை --- ரால்ஃப் நாடார்.

20. நுகர்வோரின் குறைகளை போக்கும் விதமாக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (கோப்ரா) --- 1986 ஆம் ஆண்டு இந்தியாவில் இயற்றப்பட்டது.

21. 'நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்' (கோப்ரா) - 1986 இந்தியாவில் இயற்றப்பட்டது --- நுகர்வோரின் "மஹாசாசனம் என அழைக்கப்பட்டது".

22. 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' எங்கிற மாத இதழ் மூலமாக தமிழ்நாட்டில் நுகர்வோர் விழிப்புணர்வு செய்யப்படுகிறது.

23. உலகிலேயே அதிக போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது நாடு --- இந்தியா (3 மில்லியன் கிலோமீட்டர் சாலைகள், 60% தார் சாலைகளாக உள்ளன).

24. இந்திய பொருளாதாரத்தில் சாலைப் போக்குவரத்தின் பங்கு முக்கியமானதாகும்.

25. சாலைப் போக்குவர்த்து உதவிக்கான முக்கிய எண்? 103.

26. சாலையில் விபத்துகள் ஏற்படக் காரணிகள் --- தனிப்பட்ட காரணங்கள்: வயது முதிர்வு, சோர்வு, உடல்நலக் குறைபாடு, வாகன ஓட்டுதலில் போதிய பயிற்சியின்மை மற்றும் மனநிலைக் குறை.

    சுற்றுச்சூழல் காரணிகள்: தட்பவெட்ப நிலை, இயந்திரக் கோளாறு, ஓட்டுநரின் கவணக் குறைபாடுகள்.

27. 1989 ஆம் ஆண்டு ஜூலை - 1 தேதி அன்று இந்தியாவில் கொண்டுவரப்பட்ட 'சாலைப் போக்குவரத்துச் சட்டம்' வாகன ஓட்டிகளுக்கு ஒரு அடிப்படை வழிகாட்டியாக அமைந்துள்ளது.

28. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் பெயர் என்ன? 'சாலைப் பாதுகாப்பு குழு'.

29. 'சாலைப் பாதுகாப்புக் குழு'வின் முக்கிய பணிகள் யாவை? சாலை பாதுகாப்பு கொள்கைகளை வகுப்பது, சாலை விபத்துகளை குறைப்பதும் ஆகும்.

30. 'தேசிய சாலை பாதுகாப்புக் கொள்கையை' உருவாக்கியது? சாலை பாதுகாப்புக் குழு.

31. சாலை சைகைகள் எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன? மூன்று.

32. சாலை சைகைகள் யாவை? 1) உத்தரவு சைகைகள், 2) எச்சரிக்கை சைகைகள், 3) தகவல் சின்னங்கள்.

33. அரசு தெரிவிக்கும் புள்ளி விவரத்தின் படி, ஆண்டு ஒன்றுக்கு 1.1 லட்சம் மக்கள் விபத்தினால் உயிரிழக்கின்றனர்.